பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 20 வைகாசி 2 ... இதழ் 93

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-5-78



RECEIVED 1978-5-15 PERIODICALS DIVISION UNIVERSITY OF ... LIBRARY



லாலா சோப்

பிரகாச சலவை! பளிச்சிடும் வெண்மை! ஈழம் எங்கும் கிடைக்கும்

லாலா சோப் தொழிற்சாலை அச்சுவேலி


## பரவலாக மழை பெய்கிறது
### போக்குவரத்து பாதிப்பு

[கொழும்பு]

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் பலத்தமழை பெய்துகொண்டிருப்பதாக வானிலை அவதான நிலையம் நேற்று அறிவித்தது.

தெற்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் மலைநாட்டுப் பகுதிகளிலும் பலத்தமழை பெய்கிறது.

அவிசாவலை - கினிகத்தேனை பாதை, கேகாலை, குவான்வெல பாதை, கொழும்பு-அவிசாவலை பாதை ஆகியவை வெள்ளத்தினால் சில இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளன. [ம]

# சன்சோனி கமிஷன் இன்று
# கண்டியில் கூடுகிறது
## 115 பேர் சாட்சியமளிப்பர்

(கண்டி)

கண்டியில் இன்று நடைபெறும் சன்சோனி கமிஷன் விசாரணையின்போது 115 பேர் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள். இன்று காலை 9 மணிக்கு கண்டி சரவணர் இயக்க தலைமைக் காரியாலயத்தில் திரு. எம்.சி. சன்சோனி முன்னிலையில் ஆரம்பமாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் சாட்சியமளிப்பார்கள். இ. தொ. கா. சார்பில் சட்டத்தரணி சொக்ஸி, சட்டத்தரணி பெரி. சுந்தரலிங்கம் ஆகியோர் சாட்சிகளை வழிநடத்துவார்கள்.

இன்று நுவரேலியா மஸ்கேலியா 3வது எம்.பியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு.எஸ். தொண்டமான்; இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் திரு எம். செல்லச்சாமி ஆகியோர், விசாரணையின்போது சமூகமளித்திருப்பார்கள்.

சன்சோனி கமிஷன் செயலாளர் திரு. திஸ்ஸா தெய்வேந்திராவும் சமூகமளிப்பார். கமிஷன் உப-செயலாளர் திரு. எஸ் சிவசுப்பிரமணியம், விசாரணைக்கான சகல ஏற்பாடுகளையும் கவனித்துள்ளார்.

அகதிகள் புனர்வாழ்வு கழக செயலாளர் திரு. நித்தியானந்தா தமிழர் தொழிற்சங்க கூட்டணி செயலாளர் திரு சம்பந்தன் ஆகியோரும் இன்று சமூகமளிப்பார்கள்.

அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் சார்பில் சட்டத்தரணி பாரிலட், சட்டத்தரணி கந்தசாமி ஆகியோர் சாட்சிகளை வழிநடத்துவார்கள்.

கண்டியில் விசாரணை சுமார் ஒருமாதகாலம் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது அடுத்து விசாரணையை கொழும்பிலா, திருகோணமலையிலா நடத்துவதென கண்டியில் தீர்மானிக்கப்படும்.

திருகோணமலையில் தற்போதையசூழ்நிலை ஏற்றதாக இல்லாததினால், கண்டிக்கு அடுத்தபடியாக கொழும்பிலேயே விசாரணை நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த இருவாரங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கண்டி காரியாலயத்தில் சட்டத்தரணிகள் சாட்சியங்களை பதிவுசெய்து திரட்டுத்தி வருகின்றனர்.

சம்பவங்கள் பற்றி குறிப்பிட்ட தகவலைக்குச் சன்சோனி கமிஷனுக்கு நேரடியாக அறிவித்தவர்களும், இ. தொ. கா. அகதிகள் புனர்வாழ்வு கழகம், தமிழ் தொழிற்சங்க கூட்டணி மூலம் அறிவித்தவர்களும் கண்டியில் சாட்சியமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

77 ஆகஸ்ட் கலவரத்தின் போது கண்டி மாவட்டத்தில், கற்பழிக்கப்பட்டதாக கூறப்படும் 3 தமிழ் இளம் பெண்களும், சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்க விருக்கின்றார்கள். இவர்கள் ரகசியமாகவா, அல்லது பகிரங்கமாகவா சாட்சியமளிக்கப் போகிறார்கள் என்பது அவர்கள் சாட்...


[6ம் பக்கம் பார்க்க]


## இன்ஸ்பெக்டர் கொலை: இன்று மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான தொடர்பான மரணவிசாரணை இன்று காலை யாழ் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறும்.

யாழ் பதில் நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இம்மரண விசாரணையில் திருமதி பத்மநாதன் சாட்சியமளிக்கவிருக்கிறார்.

சாட்சிகளை ஆஜர் செய்வதற்கான ஏற்பாடுகளை பொலிசார் செய்தனர்.

சம்பவம் நடந்தபோது, இன்ஸ்பெக்டர் பத்மநாதன் வீட்டில் இருந்தவர்களும் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை 20 வாலிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் கைதான மூன்று வாலிபர்களில் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். மல்லாகத்தில் கைதான மூன்று வாலிபர்கள் கொழும்பு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். (க)

## பரமநாதன் அடையாளம் காட்டப்படவில்லை
### பிணையில் விட மறுப்பு

[கொழும்பு]

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட பரமநாதன், மன்னார் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கு நிறுத்தப்பட்டபொழுது, அவரை எவரும் அடையாளம் காட்டவில்லை.

இதனைத் தொடர்ந்து, பரமநாதனை பிணையில்செல்ல அனுமதிக்குமாறு இவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு புதுமைநாயகம் நீதிபதியைக் கேட்டுக் கொண்டபோது, முழு விசாரணைகளையும் பொலிசார் முடிக்காததால் பிணையில் விடுவிக்க முடியாது என்று கூறி, பரமநாதனை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அடையாள அணிவகுப்பு 12-ம் திகதி மன்னார் நீதிமன்றத்தில் நடந்தது.

பரமநாதன், பாரிஸுக்கு புறப்பட்ட நேரத்தில், கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார். இவர் பின்னர் யாழ்ப்பாணம் சிறைக்குக்கொண்டு வரப்பட்டார்.

**முறைப்பாடு**

பரமநாதனின் சகோதரர், பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில்; பொலிஸ் விசாரணையின்போது பரமநாதன் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டார் என்றும், பரமநாதனைத் தலைகீழாகத் தொங்கவிட்டு, அவர் தலைக்குகீழே தீ வைத்தனர் என்றும், இதன் விளைவாக அவரது தலைமயிர் எரிந்துபோய்விட்டது என்றும் தெரிவித்துள்ளார். [ம]

## பண்டிதமணிக்கு கலாநிதிப் பட்டம்
### பல்கலைக்கழகம் கௌரவிக்கும்

[கொழும்பு]

பண்டிதமணி கணபதிப்பிள்ளைக்கு இலங்கைப்பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கவிருக்கிறது.

72ம் ஆண்டு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதற்குப்பின் நடைபெறவிருக்கும் முதலாவது பட்டமளிப்பு விழாவில் இப்பட்டம் வழங்கப்படவிருக்கிறது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையுடன், கீழ்காணும் மற்றும் 7பேருக்கு கலாநிதி பட்டம் அளிக்கப்படவிருக்கிறது.

கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின டாக்டர் வி.ரி.ஹெறத் குணரத்ன [முன்னாள் சுகாதாரசேவை அதியட்சகர்] டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேராசிரியர் ஈ. ஓ. ஈ. பெரேரா [முன்னாள் பேராதனை உப-வேந்தர்] டாக்டர் சிறில் பொன்னம்பலம்பெருமாள் [அமெரிக்காவில் பணியாற்றும் விஞ்ஞானி] திரு. பி. டி. எஸ். குலரத்தின [பிரபலகல்விமான்] வண வல்பொல ராகுல [வித்தியோதய உப-வேந்தர்)

## ஹெலிகாப்டரில் தேடுதல்வேட்டை

[யாழ்ப்பாணம்]

முருகேசன்படுகொலை, இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை, மற்றும் வன்செயல்கள் தொடர்பான சந்தேக நபர்களைக் கண்டுபிடிப்பதில் ஆயுதப்படையினர் நேற்று ஈடுபட்டனர்.

வடபகுதியின் பல பகுதிகளிலும் பரவலாக இத்தேடுதல் வேட்டை நேற்று ஆரம்பமானது.

பருத்தித்துறையிலிருந்து பத்துமைல் தூரத்தில் நாகர்கோவில் பகுதியில் கடற்கரையோரமாகவுள்ள காடுகளிலும், சுற்றுடலிலும் நேற்று நண்பகல் இராணுவத்தினர் ஹெலிகாப்டர் மூலம் தேடு...


[6-ம் பக்கம் பார்க்க]


## கூட்டணியில் சேருமாறு 'தேவா'வுக்கு அழைப்பு

(கல்குடா)

"தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக அரசு என்னுடன் தொடர்புகொண்டு வருகிறது. எந்தச் சூழ்நிலையிலும் எக் கட்டத்திலும் நாம் எமது இலட்சியத்திலிருந்து பிறழமாட்டோம் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்...


[6-ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### பயிற்சி

6 மாத விசேட மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 15-6-78ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு: அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11 B, மொம்ஸ்ன் பில்டிங், ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 9276

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலை, பூதாவோலிலுக்கு அண்மையில் ஆறு பரப்புக் காணி வீடு கட்டுவதற்கு உண்டு. விபரங்களுக்கு வே. நடராசா சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். 9295

மழலை இன்பம் (அரிச்சுவடி ஆசான்) ரூபா மூன்று மற்றும் வெளிநாட்டு ஆங்கில தமிழ் புத்தகங்கள், ஸரம்பிங் பேப்பர் டசின் -/60 சதம், கெசின் ஊசி -/60 சதம், பிறஸ் ஸ்ரட் டசின் -/42 சதம், சேப்ரி பின் டசின் -/65 சதம், மற்றும் சகல உபகரணங்களும் தினசரி பாவனைப் பொருட்களும் ஒரே இடத்தில் பெறுவதற்கு ஏ. வி. எஸ். குரூப் ஜேம்ஸ், ஏயர் இலோனுக்கு முன்பாக யாழ்ப்பாணம் தொலைபேசி: 7460. 9296

### தேவை

அப்பளம், சவர்க்காரம் செய்யத் தெரிந்தவர்கள் நேரில் வரவும். விபுலானந்தா அச்சகம் அன் புத்தகசாலை, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 9300

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐப்படத் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் தேவை. சேர விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசதாருடன் (20-5 78) தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ இஸ்ஞ மில்ஸ், 623, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9297

உடுப்புகளை எடுக்கவும், கொடுக்கவும் கூடிய வகையில் எமது ஸ்தாபனத்தில் கடமையாற்ற ஒருவர் தேவை. நேரில் தொடர்பு கொள்க. சந்திர பிரகாஸ் சலவைத் தொழிற்சாலை, 222, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம். 9294

### CLASSES

I.C.M.A. (A&B) Chartered Preliminary November 1978. A.C.C.A. Institute of Bankers. A.L. (Lond) Econ. commencing 1 p.m. 20-5-78 open to all.

I. C. M. A. (Seminar) Commencing 19 5-78 Friday 3 p m Saturday 9 a. m. Full day. Jaffna Education Centre, No. 22, Ramiah Chettiyar Lane, Jaffna. 9298

### கூட்டம்

[வேலணை]

வேலணை கிழக்கு மாதர் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் இன்று நடைபெறவிருக்கின்றது.

சங்கத் தலைவி திருமதி இ. பத்மாவதி தலைமையில் வேலணை கிழக்கு அம்மன் கோவிலடி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் வேலணைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு. தம்பிமுத்து, வேலணைப்பகுதி கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. அ. விஜயநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். [க]

ஆலய சம்பிரதாய மீறல்?

# கோஷ்டி மோதலில் இருவர் படுகாயம்

(மாவிட்டபுரம்)

இளவாலைப்பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவ தேவாலயத்தில் பாரம்பரியமாக இருந்துவந்த வழக்கமொன்றை மாற்ற முயன்றதையடுத்து ஏற்பட்டதாக கூறப்படும் கோஷ்டிச்சண்டையும், அதைத்தொடர்ந்து இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களும் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இளவாலை பத்தாவத்தையைச் சேர்ந்த புனித பிலிப் நேரியார் ஆலயத்தினுள் இதுவரை காலமும் பூதவுடல் உள்ளே கொண்டு செல்லப்பட்டு கிரியைகள் செய்யப்படுவதில்லையாம். மேற்படி ஆலய குருவானவர் மரணவீடு நடைபெறும் வீடுகளுக்குச் சென்றே கிரியைகள் நடத்துவாராம். ஆனால் கடந்த 9-ம் திகதி இவ்விடத்தைச்சேர்ந்த குருவானவர் ஒருவரது தாயார் காலமானதை யடுத்து அவரது பூதவுடல் மேற்படி ஆலயவளவினுள் எடுத்துச்சென்று ஆலய முகப்பில் வைத்து கிரியைகள் செய்யமுயன்றபோதே கோஷ்டிச்சண்டை உருவெடுத்ததாம்.

பாரம்பரியமாக இருந்து வந்த நடைமுறையை மாற்றி ஆலயத்தினுள் பூதவுடலைக் கொண்டுசென்றபோது ஒரு பகுதியினர் அதை ஆட்சேபித்தாகவும், பின்னர் அவர்கள் சாணத்தைக் கரைத்து கோவில் முழுவதும் தெளித்து குற்றம்போக்கியதாகவும் அப்போது இவர்களுக்கும் பூதவுடலைக் கொண்டுவந்தவர்களுக்குமிடையில் சண்டை மூண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தின் போது கோவில் குருவானவரான வண. பிதா லெபோஸ் என்பவருக்கும் சாணகத்தண்ணியால் தெளித்தனராம்.

இக்கோஷ்டிச் சண்டையில் அவ்விடத்தைச்சேர்ந்த பனியாம்பிள்ளை அருமைநாயகம், வேதநாயகம் தவகுமார் ஆகிய இருவரும் பலத்தகாயத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மேற்படி ஆலயகுருவானவர் ஆலயத்திற்கு வந்தபோது அவரை வழிமறித்து அவ்விடத்தைச்சேர்ந்த ப. இராசநாயகம் என்பவர் தாக்கியதாக காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. அதேநேரத்தில் இராசநாயகம் என்பவர் தம்மை ஆயுதங்களுடன் வந்த கோஷ்டியொன்று தாக்கமுயன்றபோது தாம் ஓடிவிட தமது நாயை அக்கோஷ்டி வெட்டிக் கொன்றுவிட்டதாகவும் காங்கேசன்துறைப் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து இளவாலைப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. காங்கேசன்துறைப் பொலிஸார் இச்சம்பவங்கள் குறித்து விசாரணை செய்துவருகின்றனர். [உ]

லஞ்சவலையில் சிக்கிய

# அரச கூட்டுத்தாபனஊழியர் பெயர்களை வெளியிடுக

[யாழ்ப்பாணம்]

கடந்த ஆண்டு லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் லஞ்சஆணையாளர் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்கள் தொகையினை சபையில் வெளியிடுமாறும், குறிப்பிட்ட இலாகா குறிப்பிட்ட விசாரணை காலதாமதமின்றி முடித்து தமது அறிக்கையை அரசாங்க வழக்குத்தொடர் பணிப்பாளருக்குச் சமர்ப்பிப்பதற்கு லஞ்சஆணையாளரை பணிக்கவேண்டுமென, காங்கேசன் பாய்தொகுதி எம்.பி வி. தர்மலிங்கம், நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

திரு. வி. தர்மலிங்கம் தனது முன்னறிவித்தலில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

லஞ்ச ஆணையாளர் தமது விசாரணையை முடித்து பின்னர் தமது அறிக்கையை வழக்குத்தொடர் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து வழக்குகள் நடைபெற்று முடிவுற 2 அல்லது மூன்று வருஷங்களெடுக்குமெனவும், அக்காலப்பகுதியில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். [செ]

### அபராதம்

(வேலணை)

மல்லிகை வைத்துக் கொண்டிருந்த மறுத்த வியாபாரி ஒருவருக்கு 200 ரூபா குற்றமாக கட்டும்படி ஊர்காவற்றுறை நீதிபதி தீர்ப்பளித்தார்.

### எதிரிக்கு அபராதம்

[யாழ்ப்பாணம்]

அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்றதாக குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரியான கைம்பெண் ஒருவருக்கு 125 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இவ் வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் கே. வி. நவரத்தினம் முன் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் புத்தூர் நவகிரியைச் சேர்ந்த கந்தசாமி கைம்பெண் பரிமளம் அனுமதிப்பத்திரமின்றி சாராயம் விற்றதாக அச்சுவேலி மதுவரி நிலையப்பொறுப்பதிகாரி தம்புகுலசேகரம் குற்றம் சாட்டியிருந்தார்.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் ஆஜரானார். மதுஇலாகா சார்பில் மதுவரிப் பரிசோதகர் வி. துரைராசா வழக்கை நடத்தினார்.

# கப்பம்கேட்ட வழக்கில் இன்று தீர்ப்பு!

[யாழ்ப்பாணம்]

20 ரூபா கப்பம் வாங்கிய தாக, பொலிஸ் கன்ஸ்டபிள் ஒருவருக்கெதிராக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பு இன்று வழங்கப்படும்.

இவ் வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை என்பவரிடம் 20 ரூபா கப்பம் வாங்கியதாக யாழ் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த மைக்கல் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

கடந்த 2 தவணைகளின் போதும், மைக்கல் கோட்டில் ஆஜராகவில்லை. எதிரியான மைக்கல் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### சம்பந்தர் விசேட ஆணையாளர்

[வேலணை]

புங்குடுதீவு கிராமச் சபையின் விசேட ஆணையாளராக யாழ்ப்பாணம் கச்சேரியில் மாவட்ட காணியதிகாரியாகப் பணிபுரியும் திரு. சம்பந்தர் நியமிக்கப்பட்டுள்ளார். [க]

# பாக். பத்திரிகையாளர் நால்வருக்கு கசையடி

லாகூர், மே 14

லாகூர் சிறைச்சாலையில் 4 பத்திரிகையாளர்களுக்கும் பத்திரிகை அலுவலக ஊழியர்களுக்கு கசையடி கொடுக்கப்பட்டது.

அரசுக்கெதிராக உண்ணாவிரதம் மேற்கொண்டமைக்காக இவர்களுக்குஇராணுவ நீதிமன்றம் தண்டனை விதித்திருந்தது.

இவர்களுக்கு கசையடி கொடுக்கப்பட்டபோது இவர்கள் "பத்திரிகைச் சுதந்திரம் நீடூழிவாழ்க" என்று கோஷமிட்டதாக பத்திரிகையாளர் சமாஜம் தெரிவித்தது.

அரசின் இக்கசையடித் தண்டனை குறித்துபத்திரிகையாளர் சமாஜம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பத்திரிகையாளர்க்கு கசையடி வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். [உ]

ஒட்டுமடம்

# கள்ளுத்தவறணை தாக்குதல் வழக்கு: எதிரிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

ஒட்டுமடம் கள்ளுத்தவறணை தாக்குதல் வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் கே. வி. நவரத்தினம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 75ம் ஆண்டு ஜூன் மாதம் ஆஸ்பத்திரி வீதியை சேர்ந்த அரியகுட்டி தம்பிநாயகம், நடேசு யோகராசா ஆகியோர் கொக்குவிலைச் சேர்ந்த செல்லன் தருமு என்பவரை ஒட்டுமடம் கள்ளுத்தவறணையில் வைத்து வாளால் வெட்டி படுகாயம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி.சபாரத்தினம் ஆஜரானார்.

......

### சமாதான நீதவான்

[கொழும்பு]

சட்டத்தரணி வி. எஸ். நடராசன் கொழும்பு மாவட்ட சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. கே. ஈ. டி. அல்விஸ் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

கொடிகாமத்தைச் சேர்ந்த திரு. நடராசன் பத்தாண்டு காலமாக சட்டத்தரணியாக பணியாற்றியபின் 1951ல் அரசாங்கசேவையில் சேர்ந்து 74 ஆண்டுவரை கம்பெனி பிரதி பதிவாளராகக் கடமையாற்றினார். பொதுத்தொண்டுகளிலும், சமூகசேவைகளிலும் அதிக ஈடுபாடு உள்ளவர்.

# பெருமழை: 1000 குடும்பங்கள் வீடிழந்தனர்

[கொழும்பு]

கொழும்பில் தொடர்ந்து பெய்துவரும் பெருமழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வசித்து வந்த 1000 குடும்பங்களுக்குமேல் வீடுகளை இழந்துள்ளன.

வனத்த முல்ல உறுகொடவத்தை ஆகிய பகுதிகளே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இக்குடும்பங்கள் தற்போது பாடசாலைக் கட்டிடங்களிலும் சன சமூக நிலையங்களிலும் தங்கியுள்ளனர். [ம-உ]

"உதவிசட்டவரைஞர் பதவி

# விண்ணப்பித்தவரின் விபரங்களை வெளியிடுக"

[கொழும்பு]

அரசு தமிழ் பிரிவுக்கு உதவிச்சட்டவரைநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அப்படிக்கோரப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் தகைமைகள் தொழில் அனுபவம் ஆகியவற்றை பேரவையில் வெளியிடுமாறு எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நீதியமைச்சர் திரு கே. டபிள்யு. தேவநாயகத்தை கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இப்பதவிக்கு விண்ணப்பங்கள் மூலம் தெரிவுசெய்திருந்தால் பெயர்களை வெளியிட வேண்டும். திரு. எஸ். நவரத்தினம் சட்டவரைநர் திணைக்களத்தில் ஏழு வருடங்களுக்கு கடமையாற்றியுள்ளார். அவர் திணைக்களத்தில் முதன்மையானவராக கணிக்கப்பட்டுள்ளார். அப்படியானவரை தெரிவுசெய்யாதிருந்தால் இரண்டு உதவிச்சட்ட வரை

[5-ம் பக்கம் பார்க்க]

வெளிவந்துவிட்டது!

செஞ்சக்தி (மாத இதழ்)

மக்கள் விடுதலை முன்னணியின் அதிகாரபூர்வமான செய்தி இதழ்

விபரங்களுக்கு தொடர்பு கொள்க:

ல்யனல் போப்பகே

149/6, தேவநம்பிய திஸ்ஸமாவத்தை, கொழும்பு 10.

9293

ஈழநாடு
The Eelanaadu

# "பாதை அமைப்பு, சிரமதானத்தால் கிராம அபிவிருத்தி முழுமைபெறாது"

## யாழ். அரசாங்க அதிபர் பேச்சு

(மாவிட்டபுரம்)

"நாட்டில் வாழும் 20 ஆயிரம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே அரசாங்கம் கிராம அபிவிருத்திக்கு முதலிடம் கொடுத்து வருகிறது. ஆகவே சாதி, இன, மத வேறுபாடுகளை மறந்து நாம் ஒவ்வொருவரும் கிராமத்தவர்கள் இது எமது கிராமம் என்ற நினைப்புடன் கிராம அபிவிருத்தியில் ஈடுபடவேண்டும். அப்போது தான் நாம் விரும்பும் கிராம அபிவிருத்தி இலக்கை அடைய முடியும்".

இவ்வாறு அச்சுவேலி கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளுக்காக நடத்தப்பட்டபயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கிராம அபிவிருத்தி இயக்கத்தில் எனக்கு பூரண நம்பிக்கை இருக்கின்றதென்றும் பாடசாலைப் பருவத்திலும் சர்வகலாசாலை மாணவனாக இருந்த போதும் அரசாங்க சேவையில் காரியாதிகாரியாக கடமை புரிந்த போதும் பல கிராமங்களிலே நடைபெற்ற சிரமதான சர்வோதய இயக்கங்களில் முழு நம்பிக்கை வைத்து மக்களுடன் சேர்ந்து பணியாற்றினேன்.

கிராம அபிவிருத்தியின் புனித தத்துவங்களை கிராம அபிவிருத்தி திணைக்கள சிரேஷ்ட மேற்பார்வையாளர் திரு. அபயகோராவிடம் கற்றுக் கொண்டேன். அதன் பயனாக கிராம அபிவிருத்தியின் புனித நோக்கங்களிலும் அதை அடையக்கூடிய வழிமுறைகளிலும் எனக்குத் திடமான நம்பிக்கை இருக்கின்றது. கிராம அபிவிருத்தி என்பது சிரமதானம் செய்வதிலோ அல்லது அரசாங்கம் வழங்கும் பணஉதவியைக் கொண்டு நிர்மாணிக்கும் கட்டிடங்களிலோ தங்கியில்லை. ஒவ்வொரு சமயத்திற்கும் எப்படி ஒரு வாழ்க்கை முறை உண்டோ அதுபோன்றுகிராம அபிவிருத்தியும் ஒரு வாழ்க்கை முறையென்றே கூறலாம்.

எனவே கிராமங்களில் பல வளங்களையும் விசேடமாக மனித வளத்தையும் பிரயோகித்து எமது குறிக்கோளை மனதில் வைத்துக் கூட்டாக ஒரு சமூகமாக முன்னேற முயல வேண்டும்.

கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் வரலாறு மிக நீளமானது. ஆனால் ஒவ்வொரு அரசாங்கமும் கிராம அபிவிருத்திக்கே முதலிடம் அளித்திருக்கின்றது. காரணம் நாட்டிலே வாழும் 20 ஆயிரம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதே அரசின் நோக்கம். சாதி, இன, மத, பாகுபாடின்றி நாம் ஒவ்வொருவரும் கிராமத்தவர்கள் என்ற உணர்வை வளர்க்க வேண்டும். எமது கிராமம் எம்முடையது அங்கு நாம் காணும் குளங்கள் ஆறுகள், நெல்வயல்கள், மரங்கள், புற்றரைகள் யாவும் எமதே. எனவே நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது கிராமங்களை வளம் பெறச் செய்வோம்" என்றார். [உ]

---

# அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயம்

அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் மிகமிக அவசியமான காரணம் இருந்தால்தான் இனி வெளிநாடு செல்லவேண்டும் என்று ஜனாதிபதி ஜயவர்த்தன உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சர்களோ, பிரதி அமைச்சர்களோ வெளிநாடு செல்வதாயிருந்தால் அதற்குரிய அவசியத்தை ஜனாதிபதிக்கு எடுத்துக் காட்டி அவரது அனுமதி பெற்றபின்னரே இனி வெளிநாடு செல்லமுடியும்.

இதுமட்டுமல்ல வெளிநாடு செல்லும் அமைச்சரோ பிரதி அமைச்சரோ ஒரு வாரத்துக்குமேல் தங்கியிருக்கக் கூடாதென்றும் ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்கள் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பத்தைத் தவறவிடுவதில்லை. ஏன் இந்தச் சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்வதிலும் சமர்த்தர்கள்.

அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குச்சென்று வருவதை எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் கண்டிப்பதும் கிண்டல்செய்வதும் சாதாரணம்.

முன்னையபிரதமர் திருமதி சிறிமாவும் அவரது அமைச்சர்கள் சிலரும் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியபோது முன்னைய எதிர்க்கட்சியினரான இன்றைய ஆளும் கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்; கிண்டல் செய்தனர்.

"வெளிநாடுகளுக்கு நாம் உல்லாசப் பயணம் செய்யவில்லை, நாட்டின் நலனுக்காகப் பயனுள்ள பயணமே செய்கின்றோம்" என்று அவர்கள் அப்போது விளக்கம் கொடுத்தனர்.

இன்றைய அரசாங்கம் ஆட்சிபீடத்துக்கு வந்ததும் ஆளும் கட்சியைச்சேர்ந்த உறுப்பினர் ஒருவர் முன்னைய பிரதமரினதும் அமைச்சர்களினதும் வெளிநாட்டுப் பிரயாணங்கள்பற்றிய விபரத்தைப் பேரவையில் கேட்டார். இந்த விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபின் அமைச்சர்கள் பலரும் வெளிநாடுகளுக்கு அடிக்கடி சென்றுவர வேண்டிவேற்பட்டது.

ஆளும்கட்சி உறுப்பினரைப் பின்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினரும் இன்றைய அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணம் பற்றிய விபரத்தைப் பேரவையில் கேட்டுப் பெற்றார்.

இதன் விளைவுதான் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயத்துக்கு ஜனாதிபதி கட்டுப்பாடு விதிக்கக் காரணமாகும்.

வெளிநாடுகள் பலவற்றிலும் நமது தூதர்களும் பிரதிநிதிகளும் இருக்கின்றனர். இவர்களுக்காக ஆண்டுதோறும் கணிசமான அளவு பணத்தைச் செலவிடுகிறோம்.

இவர்களிருந்தும்தொட்டதற்கெல்லாம் அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் சென்று வரவேண்டியது அவசியம்தானா?

---

# "சர்வதேச மொழியான ஆங்கிலத்தை முன்னைய அரசு புறக்கணித்தது"

## ஜனாதிபதி கண்டனம்

[கொழும்பு]

"சர்வதேச மொழியான ஆங்கிலத்தை முன்னைய அரசு அலட்சியம் செய்துவிட்டது. ஆனால் தமது பிள்ளைகள், உறவினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி கல்வியறிவு பெறவைத்தது"

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மீரிகமையில் நேற்று மாலை நடைபெற்ற முஸ்லிம் பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "நமது அரசு இன, மத, மொழி வேறுபாடுகளின்றி சேவையாற்றும் சகலருக்கும் ஒரேவிதமான வசதிகள் அளிக்கப்படும். சர்வதேச மொழியாக ஆங்கிலத்தை முன்னைய அரசு செய்ததுபோலன்றி சகல பாடசாலைகளிலும் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் தமது சொந்த மொழியைக் கற்கவும் தமிழர் சிங்களமும் சிங்களவர் தமிழையும் கற்க வசதிசெய்யப்பட்டுள்ளது" என்றார். (உ)

---

## இலங்கை வருகை

(சுழிபுரம்)

மதுரை திருப்புகழ் தவமணி கே. வி. தியாகராஜன் குழுவினர் இம்மாத நடுப்பகுதியில் இலங்கை வரவுள்ளனர்.

இக்கோஷ்டியினர் இலங்கை பூராவும் சென்று திருப்புகழ் இன்னிசையும் சங்கீத உபந்நியாசமும் நிகழ்த்தவுள்ளனர்.

இக்கோஷ்டியினரை அழைக்க விரும்புபவர்கள் திரு நா. அருமைநாயகம் ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் [உ]

---

## ஆண்டு விழா

[வேலணை]

அகில இலங்கை உன்னூராட்சி மன்ற சித்த ஆயுர்வேதமருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஆண்டு நிறைவுவிழாவும் மலர் வெளியீட்டுவிழாவும் இம்மாதம் 28-ம் திகதி கொண்டாடப்படவிருக்கின்றது.

---

## வருடாந்த உற்சவம்

[வேலணை]

புங்குடுதீவு புனிதபிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 11-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று 20-ம் திகதி பெரிய பாடற்பூசையுடன் உற்சவம் முடிவடையவிருக்கின்றது. [ச]

---

## மணிவாக்கு

பழிக்குப்பழி வாங்க நினைப்பது பண்பான செயலல்ல தீமை செய்தோர்க்கும் நன்மையே செய்ய முயலவேண்டும்.

—எமர்ஸன்

---

## மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி

[வேலணை]

பாடசாலைகளில் படித்துவிட்டு வெளியேறிய மாணவர்களுக்கு பயன்தரத்தக்க முறையிலான தொழிற்பயிற்சி வகுப்பொன்றை நடாத்த வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் முன்வந்திருக்கிறார்.

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடாத்தப்படவிருக்கும் தொழிற்பயிற்சி வகுப்பில் மாணவர்களுக்கு உபயோகப்படக்கூடிய மோட்டார் மெக்கானிக்கல் போன்ற இன்னும் பயன்தரக்கூடிய தொழில்கள் பயிற்சியளிக்கப்படும். (ச)

---

முன்னைய நிர்வாக சீர்கேடு:

# 18-ம் திகதி யாழ்நகரில் விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முன்னைய ஆட்சிக்காலத்தில் வேலைநிறுத்தம், அரசியல் பழிவாங்கல் அதிகார துஷ்ப்பிரயோகம் போன்றவை காரணமாக வேலைநீக்கம்செய்யப்பட்ட வடபகுதி கூட்டுறவு ஊழியர்களின் மேன்முறையீட்டு விசாரணை எதிர்வரும் 18ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சட்டத்தரணி ஜனாப் எஸ். எச். எம். சஹிட் தலைமையில் நடைபெறும்.

மேற்படி ஊழியர்கள், தம்மை விலக்கியது சட்டபூர்வமானதல்லவென தனிநபர் கூட்டுறவு விசாரணை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்ததின் பிரகாரம் இவ் விசாரணை நடைபெறுகின்றது. அன்றைய தினம் 10 முறையீடுகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. விசாரணைகள் சம்பந்தமான சகல அறிவித்தல்களும் முறையீட்டு ஊழியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

விசாரணை தொடர்ந்து சில தினங்கள் நடைபெறும் என தெரியவருகின்றது. (கே வ)

---

# வேலைவாய்ப்புத் திட்டம் பட்டதாரிகளுக்கும் இடம்

## 'அமிர்' உறுதி

(யாழ்ப்பாணம்)

தொகுதி ரீதியாக வழங்கப்படவுள்ள 1000 பேருக்கான வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழங்கப்படும் வழங்குவதாக காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. யும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் உறுதி மொழியளித்துள்ளார்.

காங்கேசன்துறைத் தொகுதி வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் திரு. அமிர்தலிங்கத்தை தொகுதியிலுள்ள அவரது காரியாலயத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே மேற்படி உறுதி மொழியை அவர் வழங்கினார்.

மேலும் திரு. அமிர்தலிங்கத்தின் ஆலோசனைக்கு இணங்க தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் மூலம் தொழில் வழங்கப் படிவம் பெறும் பொருட்டு "தொகுதியிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழங்கப் படிவம் ஒழுங்கு செய்யப்படவேண்டும்" எனக் கோரும் மகஜர் ஒன்றை மேற்படி சங்கம் தொகுதியிலுள்ள 17 தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகளுக்கும் அனுப்பிவைத்துள்ளது. (உ)

---

# "சாத்வீக முறையில் போராடவேண்டும்"

## — யாழ். எம். பி.

[கொக்குவில்]

எமது இளைஞர்கள் மத்தியில் மூத்த தலைமுறையினர் ஆச்சரியப்படும்வகையில் சுதந்திர தாகம் ஏற்பட்டுள்ளது. தாயகத்தை மீட்கும் பணியும் வளர்ந்துள்ளது. இது ஒரு பெருமைப்படத்தக்கது.

வண்ணை நகு பாரதி சனசமூக நிலைய 10வது ஆண்டு விழாவில் பேசிய யாழ்ப்பாண எம் பி. திரு. வெ. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

இன்று எமது நாடு இக்கட்டான நிலையில் உள்ளது. இந்நிலையில் இளைஞர்கள் ஒன்று கூடி எமது இயக்கத்தில் சேர்ந்து சாத்வீகமுறையில் போராடினால்தான் நாம் எமது தமிழ் மண்ணை மீட்கமுடியும்.

கலாநிதி அ. சண்முகதாஸ், திரு செ. குமாரவேலு, திரு. இ. விஸ்வநாதன், திரு இ. புஷ்பராசா ஆகியோரும் பேசினர்.

"அல்டோமோரோ கொலை:

# கொலைஞர்களுக்குமன்னிப்பு அளிக்க வேண்டும்"

## பாப்பரசர் வேண்டுகோள்

ரோம், மே 14

முன்னாள் இத்தாலிய பிரதம மந்திரி அல்டோ மோரோவைக் கொலை செய்தவர்களுக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும் என்று பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அல்டோ மோரோவின் மறைவையொட்டி நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாப்பரசர் இவ் வேண்டுகோளைவிடுத்தார்.

இத்தாலியப் பிரதமர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர், உலகப் பிரமுகர்கள் முதலானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் திருமதி அல்டோ மோரோவும் அவரது நான்கு பிள்ளைகளும் கலந்துகொள்ளவில்லை.

தமது கணவரது மரணச் சடங்கிற்கு ராஜாங்க மரியாதை தேவையில்லையென்று திருமதி அல்டோ மோரோ கூறியிருந்தார். என்பதும் மரணச்சடங்கு அரசு தலையீடின்றியே நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## இலங்கைக்கான ஜப். உதவி அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வருடம் ஜப்பானில் இருந்து இலங்கைக்குக் கிடைக்கவிருக்கும் உதவி 40 சத வீதத்தால் அதிகரிக்கப்படவிருக்கிறது.

இவ்வருடம் இலங்கைக்கு 8 கோடி 80 லட்சம் டாலர் உதவியை அளிக்கவிருக்கிறது.

கடனுதவிக்கு அறவிடும் வட்டிவிகிதத்தைக் குறைக்கவும் ஜப்பான் இணங்கியுள்ளது. (உ)

## புதிய அதிபர்

(சுழிபுரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி புதிய அதிபராக இன்று 15-ம் திகதி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபராக இதுவரை கடமையாற்றிய திரு. என். அருணசலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (உ)

## தென்னை மீது இடிவிழ்ந்தது

(சுழிபுரம்)

வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள அம்பலவாணர் மைப் பெண்நாகம்மா என்பவருக்கு சொந்தமான வளவிலுள்ள தென்னை மரத்தின் மீது இடி விழுந்த மரம் பற்றி எரிந்தது.

சனிக்கிழமை முற்பகல் இச்சம்பவம் நடைபெற்றது. பயங்கரமான இடியோடு கூடிய முழக்கத்தை ஓர் தீச்சுவாலை மரம் மேல் வந்து விழுந்ததை பலர் கண்டு கொண்டனர். இடிவிழுந்த மரத்துக்கு இருபக்கத்துக்கு அருகே இருந்த இரு பெண்கள் மயிரிழையில் தெய்வாதீனமாக தப்பிக் கொண்டனர் (உ)

கமறூ தீவில்

# இராணுவப் புரட்சிமூலம் ஜனாதிபதி ஆட்சி கவிழ்ப்பு

லண்டன், மே 14

கமறூ தீவில் ஜனாதிபதி ஆட்சி இராணுவப்புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டுவிட்டது.

ஜனாதிபதி இப்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

இரத்தக் களரி எதுவும் இன்றி ஆட்சி கவிழ்ப்பு நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னரும் மூன்று தடவை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது... கள் ஆட்சி கவிழ்ப்பு முயற்சி பிடத்தக்கது. (உ)

## பாவிப்புக்கு உதவாத' மல்லி

[வேலணை]

சுகாதாரத்துறை ப. நோ. கூ. சங்கம் தனது கிளைகள் மூலமாக மக்களுக்கு விநியோகித்துவந்த மல்லி பாவிப்புக்கு உதவாத வெறும் குப்பையும் மண்ணும் நிறைந்ததாக உள்ளதாம் என யாழ். அரசாங்க அதிபருக்கு சுகாதாரத்துறை பட்டினசபை முன்னாள் தலைவர் திரு. பி. இமனுவல் இதுபற்றி கடிதமூலம் புகார் செய்துள்ளார். (க)

## புதுடில்லியில் தேசாய்-எம். ஜி. ஆர். சந்திப்பு

புதுடில்லி, மே 14

தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று புதுடில்லியில் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடினார்.

தமிழ்நாட்டுத் தொழிலாளர் நிலை குறித்து திரு. இராமச்சந்திரன் தொழில் அமைச்சர் திரு. ரவீந்திர வர்மாவையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (இ)

## விலையைக் கூட்டி விற்றராம்

(வேலணை)

'விட்டா மோல்ட்' பால் விலையை கட்டுப்பாட்டு விலையிலும் 4 ரூபா கூட்டி விற்றதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் வேலணை வங்களாவடி சந்தியைச்சேர்ந்த வியாபாரி ஒருவருக்கு 150 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம)

# ஆபிரிக்க நாடுகளில் கியூபாவின் ராணுவத் தலையீடு

## கார்ட்டர் கண்டனம்

வாஷிங்டன், மே 14

ஆபிரிக்க நாடுகளில் கியூபா அனுவசியமான இராணுவத் தலையீடுகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தால் அமெரிக்காவுக்கும், கியூபாவுக்கும் இடையில் நல்லுறவு விருத்தி ஏற்படாது என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மிகார்ட்டர் அறிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் திரு. கார்ட்டர் இதனை அறிவித்தார்.

அமெரிக்காவுடன் நட்புறவை வளர்த்துக்கொள்வதாயின் கியூபா தனது போக்கைமாற்றிக் கொள்ள வேண்டும் அவர் சொன்னார். (உ)

## முகமூடி இளைஞர்கள் நள்ளிரவில் கொள்ளை!

[கொழும்பு]

முகமூடி அணிந்த 12 இளைஞர்கள் எலகந்த தோட்டத்திலுள்ள வீடொன்றில், நள்ளிரவில் சென்று துப்பாக்கி முனையில் 3090 ரூபா பெறுமதியான நகைகளையும் துணிகளையும் கொள்ளையடித்துள்ளனர்.

அதே இரவு மில்லேசா தோட்டத்திலிருந்து திரும்பிய ஒருவரை தாக்கி, 7940 ரூபாவை மூவர் வழிப்பறி செய்துள்ளதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

பணத்தை பறிகொடுத்தவர் அபாயகரமான நிலையில் ஹொரணை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இச் சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் தீவிரவிசாரணைசெய்துவருகின்றனர். (க)

பொலிஸ் சார்ஜன்டுக்கு

## 2 வருடச்சிறையும் 1500 ரூபா அபராதமும்

(கொழும்பு)

லஞ்ச வழக்கில் குற்றவாளியாகக்காணப்பட்ட பொலிஸ் சார்ஜன்டுக்கு 2 வருட கடூழிய சிறைத் தண்டனையும்ரூ.1,500 அபராதமும் விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு கொழும்பு மாவட்ட நீதிபதி கே. விக்னராசா முன்னிலையில் நடைபெற்றது

இவ்வழக்கில் 76 ஆகஸ்ட் 19-ந்தேதி கிஸகரகம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் எல். ஏ. டி. வீரசிங்க நீதிமன்றத்திலிருந்து ஒரு கட்டளையைப் பெற்றுக் கொடுக்க எஸ். டி. ஜினதாசா என்பவரிடம் 200 ரூபாவையும் சாராயம் போத்தலொன்றையும், லஞ்சமாக வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில்சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] சட்டத்தரணி நெவில் தேவநாராயணவின் அனுசரணையுடன் ஆஜரானார்.


றைபூனில் 70%



களை கட்டி

வெங்காய

விளைச்சலைப் பெருக்கும்

வெங்காயம் புதைத்து 2-3 நாட்களில் 1½-2 றாத்தல் 50-60 கலன் நீரில் கலந்து பாவித்தால் எல்லா களைகளையும் கட்டுப்படுத்தும்.

6 அவுன்ஸ் ¼ (கால்) ஏக்கருக்குப் போதுமானது இதற்கு ஆக மொத்த செலவு ரூ. 11/50 மட்டுமே

பயிர்களைக் காத்துப் பணலாபம் பெறப் பாவியுங்கள் பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

உற்பத்தியாளர் பேயர் ஜெர்மனி

BAYER

இலங்கையில் அடைத்து விநியோகிப்போர் ஹேகெம் லிமிட்டெட் 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10

**நாகம்ஸ்** (சுன்னாகம்) தினசரி 6-45, 10-00 பாலச்சந்திரன்-சந்திரகலா நடித்த **வாடைக்காற்று**

**வெஸ்லி** (மானிப்பாய்) தினசரி 6-30, 9-45 ஜெய்சங்கர்-பத்மினி நடித்த **பெண் தெய்வம்**

வெற்றிகரமான 2-வது மாதம் **மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ நடித்த **ஊருக்கு உழைப்பவன்**

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் ஜோதி - விஜயா **கிரகப்பிரவேசம்** (கலர்)

**லிடோ** போன்: 7692 (யாழ். நகர்) அசோகன், சந்திரகாந்தா **இது சத்தியம்**

**ராணி** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி—மஞ்சுளா நடித்த **உ த் த ம ன்** (ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த **ஜானகி சபதம்**

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7648, தினசரி 10-15, 3-15, 6-15 10 00 சிவாஜி... ஜமுனா... வீரப்பா... கண்ணாம்பா **மருதநாட்டு வீரன்** — புத்தம் புதிய பிரதி —
மே 15ந் திகதி முதல் காலை 8-30 மணிக்காட்சி மட்டும் உலகப் புகழ்பெற்ற அதிசயமிகு சர்க்கஸ் காட்சிகளை உங்கள் குழந்தைகளுடன் கண்டுகளியுங்கள் **CIRCUS** Color

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் முத்துராமன் — ஜெயலலிதா நடித்த **சூ ரி ய கா ந் தி**

**Regal** (Jaffna) Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only **Trap On Cougar Mountain** (Color) Jungle Adventure

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) வெற்றிகரமான தினசரி 4 காட்சிகள் 2வது வாரம் முத்துராமன் — சந்திரகலா நடித்த **காலங்களில் அவள் வசந்தம்** உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும் (கலர்)
Also Showing World news, Soccer—Germany vs. Italy — World Cup Tournament — Motor Cycle Display. (All in Colour)


காங்கேசன் தொழிற்சாலையில்

# சீமெந்து மோசடி: உயர்குழு விசாரணை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இடம்பெற்ற சீமெந்து மோசடி குறித்து உயர் அதிகாரிகள் குழு வொன்று விசாரணை மேற் கொண்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து தட்டுப்பாடான நேரத்தில் 50 ஆயிரம் மைக்கற் சீமெந்து மோசடி செய்யப்பட்டது தெரியவந்ததையடுத்து இதுகுறித்து ஆராய கொழும்பிலிருந்து வந்துள்ள உயர் அதிகாரிகள் குழு தொழிற்சாலையில் விசாரணைகளை மேற் கொண்டுள்ளது.

இம் மோசடியில் காரியாலய சேவகர் ஒருவரும் 4 உத்தியோகத்தர்களும் சம்பந்தப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. விசாரணை முடிவில் இவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது. (இ)

## பாவற்குளம் கொலை: 4 எதிரிகளும் விடுதலை

(வவனியா)

பாவற்குளம் கொலைவழக்கில் எதிரிகள் நான்குபேரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு கடந்த புதன் கிழமை வவனியா நீதிமன்றத்தில் ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முதல்நாள் விசாரணையின் முடிவில் எதிரிகள் அனைவரும் ஜூரிசபையினரால் ஏகமனதாக சுற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் பெ. இரத்தினசாமி, பெ. கறுப்பண்ணன், இ. கணேஸ், நா. சிவக்குமார் ஆகிய நால்வரும் பாவற்குளத்தில் வசித்த செந்திநாதர்மைக் பெண் செல்லமுத்து (வயது 70) என்ற பெண்ணின் கழுத்தை நெரித்துக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

மூன்றாவது எதிரியான கணேஸ் அளித்த குற்ற ஒப்புதல் தொடர்பாக சிறைச்சாலை அலுவலர் பாஸ்கரதாஸ் வவனியா நீதவானாக இருந்த கண்டி மேலதிக மாவட்ட நீதிபதி திரு. உனம்புவ ஆகியோர் ஜூரிசபையினர் இல்லாதிருக்கச் சாட்சியமளித்தனர். திரு. உனம்புவ எதிரிகளின் சட்டத்தரணியால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டதை அடுத்து நீதிபதி ஜனாப் அப்துல்காதர் குற்ற ஒப்புதல் ஏற்கப்படமுடியாதென அறிவித்தார்.

இதன்பின்னர் ஜூரிசபையினர் அழைக்கப்பட்டு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது. அரசசட்டத்தரணி திரு. க. ஜெயக்குமார் தனது ஆரம்ப உரையில், எதிரிகள் இறந்தவரின் கழுத்தை நெரித்து மூச்சைத் திணறவைத்துக் கொலை செய்துள்ளார்கள் இறந்தவர் வீட்டில் வாழ்ந்த இவர்கள் தலைமறைவாகி பல மாதங்களின் பின்னரே கைதுசெய்யப் பட்டுள்ளார்கள். இவ்வழக்கில் சந்தர்ப்ப சாட்சியங்கள் மட்டும் உண்டு, என்று குறிப்பிட்டார்.

முதலில் வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாக்கியநாதன் சாட்சியமளித்தார். அடுத்து சாட்சியமளித்த இ. விஜயபாஸ்கரனை குறுக்குவிசாரணை செய்த சட்டத்தரணி திரு மௌசுப்டீன் ஒரு முரண்பாட்டைப் பெற்றார். சட்டத்தரணி கனக மனோகரன் நான்கு முரண்பாடுகளைப் பெற்றார். அதை அடுத்து திருமதி விஜயலக்ஷ்மி இராஜாரியம்பிள்ளை (வயது 29) சாட்சியம் அளித்தார். அவர் சட்டத்தரணி கனக மனோகரனால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

பின்னர் நீதிபதி முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டி இந்த வழக்கில் நியாயமான சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இதைத்தொடர்ந்து நடத்த விரும்புகிறீர்களா? என்று ஜூரிசபையினரைக்கேட்டார். அவர்கள் எதிரிகள் சுற்றவாளிகள் என்று கூறியதைத்தொடர்ந்து எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் முதல் மூன்று எதிரிகளும் இ. தொ. கா. உறுப்பினர்களானமையால் அவர்களுக்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சட்டத்தரணி திரு. எம். மௌசுப்டீனை ஏற்படுத்தியிருந்தது. நான்காம் எதிரிக்காக சட்டத்தரணி திரு. கனக மனோகரன் ஏற்பட்டிருந்தார். அரசதரப்பில் திரு. க. ஜெயக்குமார் வழக்கை நடத்தினர். (இ)

## நூலகக் கட்டடம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை அலுவலகத்திற்கு அருகாமையில் புதிய நூல் நிலையக்கட்டிடம் அமைக்கப்படவுள்ளது.

இம்மாதப் பிற்பகுதியில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்நாட்டு வைபவம் நடைபெறும்.

கிராமசபை விசேட ஆணையாளர் திரு. எஸ். ஞானபாஸ்கரன் மூன்று மாதத்துக்குள் புதிய நூல்நிலையக் கட்டிடம் கட்டிமுடிக்கப்படும் என்று தெரிவித்தார். (உ)


**Rio** (Jaffna) Daily 4 Shows **Caravan to Vaccares** [Color Scope]


## கடுங்காய்ச்சலால் மரணம்

(மாவிட்டபுரம்)

கடும் காய்ச்சலால் இரு வயோதிபர்கள் மரணமானார்கள்.

குரும்பசிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி கதிரேசு (68வயது) இளையப்பு சின்னத்துரை (60 வயது) ஆகியோரே இவ்வாறு மரணமானவர்களாவர்.

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு மரணமான இவர்களது மரணவிசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா நடத்தினார்.

இருவருக்கும் கடுமையான காய்ச்சல் இருந்தமையால் மரணம் சம்பவித்ததாக சாட்சியங்களில் தெரிவிக்கப்பட்டது.

இயற்கை மரணங்கள் என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (உ)

## இடைக்கால உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சங்கானை வடக்கு மடத்தடிச் சொத்துக்கள் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு கடந்த 11-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இடைக்காலக்கட்டளை ஒன்று விடுக்கப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை முடியும் வரையில் அம்மடத்தின் சொத்துக்கான மரங்கள், மண் போன்றவற்றை அகற்றலாகாதெனவும், அங்குள்ள கட்டடங்களுக்கு சேதங்களையோ, மாற்றங்களையோ ஏற்படுத்தலாகாதெனவும், சொத்துக்களை விற்கவோ ஈடு வைக்கவோ, குத்தகைக்குக் கொடுக்கவோ அல்லது வேறு எந்தவிதத்திலும் பராதீனம் செய்யவோ கூடாதெனவும் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## தினமும் சொற்பொழிவு

(சங்கானை)

சங்கானை வெல்லில் முருகமூர்த்திகோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 11-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும். இந்த வைபவத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும். (எ)

களவாகமாடு

# வெட்டியவருக்கு 100ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

பாலை மூடாமல் கொண்டு சென்ற நால்வருக்கு யாழ் நீதவான் திரு. கே. வி. வரதராஜன் 50 ரூபா அபராதம் விதித்தார்.

அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும் உணவுப் பரிசோதகருமான திரு குமரகுரு இவ்வழக்குகளை தாக்கல் செய்திருந்தார்.

அடை என அட்டை இல்லாமல் பாலெடுத்துச்சென்ற 7 பேருக்கு தலா 25 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

களவாக மாடு வெட்டியதாக தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றொருவருக்கு களவாக மாடு வெட்டியதற்காக 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

உணவுப் பரிசோதகரான திரு. க. குமரகுரு சுகாதார மேற்பார்வையாளர்களான திரு. யோ. அந்தோனிப்பிள்ளை, திரு. எஸ். இ. ராஜேஸ்வரன் ஆகியோரின் உதவியுடன் இப்பரிசோதனைகளை நடத்தினர்.

## விண்ணப்—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் பதவிகளுக்குச் செய்யப்பட்ட தெரிவுகளை மீண்டும் பரிசீலனை செய்ய முன்வர வேண்டுமென, வாய்மூலமான விடைக்கான முன்னறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார். (செ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# குற்றம் இழைத்தோர் மீது
# விரைவில் சட்ட நடவடிக்கை

## வெளிக்கள நிலையத்திற்கு பல்கலைக்கழக அந்தஸ்து?

[பருத்தித்துறை]

"இலங்கை பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக இந்த ஆராய்ச்சிநிலையம் மிகவிரைவில் தரம் உயர்த்தப்படும்" என்று தொண்டமானாறு வெளிக்கள ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்குக்கு தலைமைவகித்துப் பேசுகையில் பருத்தித்துறை எம். பி. திரு க துரைரத்தினம் உறுதியளித்தார்.

'பல்கலைக்கழக அந்தஸ்து பெறும் இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மீன் இனங்கள் பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும் இந்த அந்தஸ்தை மிகவிரைவில் பெறுவதற்கு நான் முயற்சி மேற்கொள்வேன்" என்று தெரிவித்த பருத்தித்துறை எம். பி;

"இந்த ஆராய்ச்சி நிலையத்தில் மீன்பிடி அபிவிருத்தியை மட்டுமின்றி விவசாய அபிவிருத்திக்கும் போதிய நடவடிக்கை எடுக்கப்படும். 1966ம் ஆண்டு, தொண்டமானாற்றில் உவர்நீர் ஏரியை நன்னீர்த் திட்டமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது காலப்போக்குக்கு ஏற்ப தொடர்ந்து உவர்நீர் ஏரியைப் பாதுகாத்து, மீன் இனங்களை வளர்ப்பதுடன், ஏரியைச்சுற்றி அணைகட்டப்பட்டு அதன் அருகில் தாவரங்களை வளர்ப்பதுடன் அடுத்த பகுதியில் மழைநீரைத் தேக்கி நன்னீர்த்திட்டமும் ஏற்படுத்தப்படும்" என்றார்.

"இங்கு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் மிகவும் திறமைசாலிகள்" என்றும் பருத்தித்துறை எம்.பி. திரு.க துரைரத்தினம் குறிப்பிட்டார்.

### சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா

(நாவலப்பிட்டி)

ஆத்மஜோதி ஆசிரியர் வெத்திரு நா. முத்தையாவின் அறுபதாவது வயது பூர்த்தியையொட்டி சஷ்டியப்த பூர்த்தி சாந்திவிழா இம் மாதம் 22-ம் திகதி திங்கட்கிழமை நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில் பகல் நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமை பகல் சாந்தியும் பிற்பகல் விழாவும் நடைபெறும். திரு. பி. டி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெறும் விழாவில் கி. லக்ஷ்மணஐயர் பொ. வல்லிபுரம் எஸ் பாலசுப்பிரமணியம் ஐயர் எஸ் சண்முகராசா ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளார் வாழ்த்துரையை வித்துவான் மு சபாரத்தினம் கே. பி. ஹரன் டாக்டர் செ சிவஞானசுந்தரம் பொ. சந்தையா உட்பட மற்றும் பலர் வழங்கவுள்ளனர் இறுதியில் இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## சர்க்காரியாக் கமிஷன் அறிக்கை பற்றி நாஞ்சில்

சென்னை, மே 14

சர்க்காரியா கமிஷன் அறிக்கையை தமிழக அரசு கவனமாகப் பரிசீலித்து வருகிறது. குற்றம் இழைக்கப்பட்டவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்கள் மத்தியில் இன்று நிதி அமைச்சர் பேசுகையில், சர்க்காரியா கமிஷனின் இறுதி அறிக்கை பற்றியும் கருத்து வெளியிட்டார்.

"கமிஷனின் இறுதி அறிக்கை லோகசபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிகார துஷ்பிரயோகம், பொதுப்பண மோசடி குறித்து முன்னாள் முதலமைச்சர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு, குற்றவாளியாக அவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். கமிஷனின் அறிக்கையை தமிழக அரசு கவனமாக இப்பொழுது பரிசீலனை செய்துவருகிறது கட்சிரீதியில் எவரையும் நோக்கும் எண்ணம் அரசுக்குக் கிடையாது குற்றம் இழைக்கப்பட்டவர்கள் தண்டனை அனுபவிக்கவேண்டும் குற்றம் இழைக்கப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்" என்றும் நிதி அமைச்சர் நாஞ்சில் மனோகரன் தெரிவித்தார்

### கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையிலேயே நாம் எந்தவிஷயத்தையும் அணுகுவோம்" என்று நேற்று சந்திவெளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினார். இக் கூட்டத்துக்கு திரு. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்;

"தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்க்க அரசு முயற்சிக்கும் அதே நேரத்தில் சட்ட ரீதியாக சில நடவடிக்கைகளைக் கொண்டு வரவும் அரசாங்கம் விரும்புகிறது" என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கன்னார் எம். பி. திரு சூசைதாசனும் பட்டிருப்பு எம். பி. யும், நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்துக்கு கூட்டாக அழைப்பு விடுத்தனர்.

"கூட்டணியில் சேருங்கள்" என்று இவர்கள் பகிரங்கமாக அழைப்பு விடுத்தனர்.

[ந]

## திருக்கேதீஸ்வரம் சென்றனர் வேலணை மாணவர்

(வேலணை)

இலங்கையில் பாடல்பெற்ற சிவாலயமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த உற்சவம் 12ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இக் கோவிலின் 2வது திருவிழா வேலணை மத்திய மகாவித்தியாலய மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் கொண்டாடப்பட்டு வருவது வழக்கம்.

இவ்வருடமும் இத் திருவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவதற்காக 175 மாணவ மாணவிகளும் 30 ஆசிரியர்களும் பெற்றோர்களும் பாடசாலை அதிபர் திரு. குணபாலசிங்கம் தலைமையில் பஸ்வண்டி மூலம் 13-ம் திகதி கல்லூரியிலிருந்து ஆலயத்திற்கு சென்றனர். (ந)

### விசேட ஆணையாளர் நியமனம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து நயினாதீவு கிராம சபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ந)

## வயோதிபர்களுக்கு இலவச ஆங்கிலக் கல்வி

(வேலணை)

வேலணை வட்டாரக் கல்வி அதிகாரியினால் நடாத்தப்படவிருக்கும் வயதுவந்தவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்பொன்று இம்மாதம் 24ம் திகதி மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகும்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசனால் இவ் வகுப்பு ஆரம்பித்துவைக்கப்படவிருக்கிறது.

இவ்வகுப்பு ஆரம்ப வைபவத்தில் ஊர்காவற்றுறைத் தொகுதி பா. உ. பண்டிதர் கா. பொ இரத்தினமும் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார். [ந]

### சன்சோனி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடும்போது முடிவு செய்யப்படும்.

பாதிக்கப்பட்ட தமிழ் தோட்டத்தொழிலாளர்களே, கூடுதலாக கண்டியில் சாட்சியமளிக்கவிருக்கின்றனர். [ந]

## "குருகுல பாடசாலைக்கு சைவமக்கள் உதவவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"மதகுருமார்களுக்கு வழங்கப்படும் கௌரவம், நமது சமூகத்தில் இந்துக்குருமார்களுக்கு வழங்கப்படவில்லை. இது ஒவ்வொரு இந்துவுக்கும் வேதனையளிக்கின்றது அதே வேளையில், எமது குருமார்கள் தக்க பயிற்சிபெற வசதியில்லாது இருக்கின்றார்கள் இக்குறைகளை நிவர்த்திசெய்ய குருகுல பாடசாலைக்கு சைவமக்கள் அனைவரும் கைகொடுத்து உதவ முன்வரவேண்டும்" என்று நீராவியடியில் நேற்று நடைபெற்ற சிவானந்த குருகுல பாடசாலைக் கட்டிட ஆரம்பவிழாவில் மங்கள விளக்கேற்றி வைத்துப் பேசுகையில் எஸ். ரி. ஆர். பிலிப்ஸ் அதிபர் திரு எஸ். தியாகராஜா குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ கைலாசநாதக்குருக்கள் தலைமைவகித்தார். அவர் தமது உரையில், குருபரம்பரையை இருஷ்டிக்க ஒரு குருகுலம் அவசியம் என்றார்.

வரவேற்புரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய ஐயர் சாஸ்திரிகள், "இன்று குருகுலம் இறுவர் விடுதிக்கும் பாடசாலைக் கட்டிட ஆரம்ப விழாவிற்கு வருகை தந்து பொருளுதவி செய்திருப்பவர்கள் நிச்சயமாக தொண்டுள்ளம் படைத்தவர்கள்" என்று கூறினார்.

மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராஜா உரையாற்றுகையில் சைவ அபிமானிகள் நிருவிற்கச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்கு அளிக்கும் தொண்டாகும். இன்று நிறுவப்படவிருக்கும் குருகுலத்திற்கு சிறியதொகையானாலும், பெரிய தொகையானாலும் எல்லோரும் நிதியுதவி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். [கெ]

### ஹெலிக்கப்டர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தல் வேட்டை நடத்தினர். எவரும் கைதுசெய்யப்படவில்லை.

சாவகச்சேரி பகுதியில், பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக தேடுதல் நடத்தினர்.

இவை தவிர, வடக்கின் பல பகுதிகளிலும் பகலும் நேற்று இரவும் வாகனங்கள் இடைநிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டன. சந்தேகத்துக்குள்ளானவர்கள் கடுமையாகவிசாரணை செய்யப்பட்டனர்.

நேற்றைய 'ஈழநாடு' வெளியிட்ட முதற்பக்கச் செய்திபோல முருங்கன் படுகொலை சம்பந்தமாகத் தேடப்பட்டுவரும் சந்தேகநபர்கள் நால்வர் பற்றிய விபரங்கள் புகைப்படங்களைக் கொண்ட பெரிய அளவிலான சுவரொட்டிகள் கொழும்பு நகரின் பல பகுதிகளிலும் காணப்படுகிறது. இந்தச் சுவரொட்டிகள் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை தருமநாதன்

மல்லாகம் இந்துக்கல்லூரி ஆசிரியர் செல்லத்துரை தருமநாதன் காலமானார். இவர், இராஜேஸ்வரியின் (அம்பிகா) அன்புக் கணவரும், வேம்படி மகளிர் கல்லூரி மாணவி சிறிதேவி சின்னத்தங்கத்தின் தந்தையாரும், காலஞ் சென்ற திரு செல்லத்துரை [O A] திருமதி செல்லத்துரை ஆகியோரின் புதல்வனும், திரு. தம்பு [மலேயன் பென்ஷனர்], திருமதி தம்பு ஆகியோரின் அன்பு மருமகனும், திரு மயில்வாகனம், திருமதி பத்மாவதி கதிர்காமநாதன் டாக்டர் பத்மநாதன். திருமதி கமலாவதி கருணாநாதன், திருமதி லீலாவதி சூரியதேவா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரது பூதவுடல் ஈமைக்கிரியைகளுக்காக இன்று [15 5-78] திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு குடும்பமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

டாக்டர் எஸ் பத்மநாதன்,

7ம் கட்டைவடி
மல்லாகம்.

9303

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
The Eelanadu P. O. Box 49, Jaffna Telegram 'Eenaadu' Telephone 189 Registered as a Newspaper in Sri Lanka.